DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.250/2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.2 |
| Name | :ஸ்டீபன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2023

-----

(எதிரிகள் 1, மற்றும் 3 முதல் 6 வரை ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் கல்கொண்டான்பட்டி காலனியின் குடியிருக்கிறேன. நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 14.04.2014ம் தேதி மாலை 4.30 மணிக்கு மூக்கன் தோட்டத்தில் குளிப்பதற்காக நானும் என் அண்ணன் ஆனந்தன், அண்ணன் மகன் அசீர்வாதம், பிரசாத் ஆகியோர்கள் நின்றிருந்தோம். அப்போது நிலம் வாங்கியது சம்மந்தமாக முன் விரோதம் காரணமாக அங்கு வந்த ஒச்சாத்தேவர், அவரது மனைவி பாப்பு, அவரது மகன்கள் சரவணன், பிரபு, ஒச்சாத்தேவர் அண்ணன் நல்லதம்பி, அவரது மனைவி ஒச்சம்மாள் ஆகியோர்கள் அனைவரும்

கையில் கம்பு, கம்பி, அருவாள் ஆகிய ஆயுதங்களுடன் வந்து அண்ணன் ஆனந்தனை நாங்கள் வாங்க நினைத்த இடத்தை நீ வாங்கிவிட்டாய் என்று சொல்லி அவதூராக பேசி இத்தோடு தொலைந்து போடா என்று சொல்லி சரவணன் கையில் வைத்திருந்த அருவாளால் ஆனந்தனை இடது காலில் வெட்டி எலும்பு முறிவு காயத்தை ஏற்படுத்தினார். ஒச்சாத்தேவர் ஆனந்தனை வலது தோள்பட்டை, மற்றும் வயிற்று பகுதியில் கம்பியால் அடித்து காயங்களை ஏற்படுத்தினார். பின்பு ஒச்சாத்தேவர் மனைவி பாப்பு கம்பால் ஆனந்தன் முதுகில் அடித்து வீக்க காயத்தை ஏற்படுத்தினார். இதனை பார்த்து விலகச் சென்ற என்னை பிரபு என்னை அருவாளால் ஓங்கி தலையை பார்த்து வெட்டும் போது நான் இடது கையால் தடுத்ததால் அந்த வெட்டு எனது இடது கையில் பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. நல்லதம்பி கம்பியால் எனது நெற்றியில் அடித்து இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார். அதனை பார்த்து விலக வந்த எனது அண்ணன் மகன் ஆசீர்வாத்தை பிரபு தலையில் அருவாளால் வெட்டி பலத்த காயத்தை ஏற்படுத்தினார். நல்லதம்பி பிரசாத்தின் வலது கையில் கம்பியால் அடித்து எலும்பு முறிவு ஏற்படுத்தினார். பின்பு பிரசாத் விலக்க ஓடி வந்தார். அவரை பிரபு தலையில் அருவாளால் வெட்டி பலத்த காயத்தை ஏற்படுத்தினார். நல்லதம்பி பிரசாத்தை வலது முழங்கையில் கம்பியால் அடித்து எலும்பு முறிவு காயத்தை ஏற்படுத்தினார். பின்பு இராணியம்மாள், மற்றும் மாயி என்பவர்கள் ஓடி வந்து சத்தம் கேட்டு

விலக்கி விட்டார்கள். பின்பு ஒரு காரில் ஏற்றிவிட்டு உத்தப்பநாயக்கானூர் காவல் நிலையம் சென்றோம். பின்பு காவல்துறையினர் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். காயம் பலமாக இருந்ததால் மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு சார்பு ஆய்வாளர் முதல் நாளே விசாரித்தார். மறுநாள் ஆய்வாளர் விசாரித்தார். காட்டப்படும் அருவாள் பிரபு என்னை இடது கையில் வெட்டி எலும்பு முறிவு காயம் ஏற்படுத்தியது அது சா.பொ.3.

**குறுக்கு விசாரணை: இல்லை.**

/sd/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 14.07.2023
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.